

# தங்க மீனும் வெண் முத்தும்

## பூங்கோதை

நீதிக்கதை

3.3

STEM-Kalvi Charity



அழகிய நீலக் கடல் ஒன்றில் ஒரு தங்க மீனும் அதனுடைய தோழர்களும் வாழ்ந்து வந்தன. அவை எப்போதும் ஒன்றோடொன்று பாசத்துடனும் நட்புடனும் சேர்ந்து, பேசிச் சிரித்து விளையாடுவது வழக்கம்.



ஒரு நாள், தங்கமீன் தன்னுடைய வீடான,
கடற்பாறைகளின் பின் பக்கமாகத் தனியாக நீந்தியது.
அப்போது போது அழகிய வெண்முத்து ஒன்று,
சிப்பியின் உள்ளே இருப்பதைக் கண்டது.
ஒருபோதும் இல்லாமல் அதற்கு ஒரு விபரீதமான
சிந்தனை தோன்றியது.



தங்கமீன் வழமையாகத்  தன் பொருட்கள் அனைத்தையும் தன் தோழர்களுடன் பகிர்ந்து கொள்வது வழக்கம். ஆனால் இந்த வெண்முத்தைக் கண்டதும் தான் மட்டும் அதை வைத்திருக்க ஆசைப்பட்டது. அதற்குக் காரணம் அந்த வெண்முத்தின் பளீரென்ற வெண் நிறமும் தனித்தன்மையும் தான்.



தங்கமீன் தன் கருணை, பாசம், தோழமை, அனைத்தையும் ஒரு நொடியில் மறந்தது. அந்த வெண்முத்தை யாருக்கும் தெரியாமல் தன் வீட்டில் மறைத்து வைத்தது.



தங்கமீனின் தோழன், தோழிகள் அனைத்தும் தங்கமீனைக் காணாது துயர் அடைந்தன. அதற்கு ஏதோ நடந்து விட்டது என யோசிக்கத் தொடங்கின.



அதே வேளையில் தங்கமீனும்  தன் வெண்முத்தை யாராவது திருடி விடுவார்களோ என்ற அச்சப்பட்டது. தன் வீட்டில்   சாப்பிடாமலும், தூங்காமலும் அதனைக் காவல் காக்க ஆரம்பித்தது.  தன் தோழர்கள் தன்னைத் தேடுவார்கள் என்ற சிந்தனையும் அதற்கு வராமல் இல்லை. ஆனால் தங்கமீன் தன் பேராசையால் அந்தச் சிந்தனையைக்  கை விட்டது.



நாட்கள் சில கழிந்தன. தங்கமீன் மெலிந்து, அதன் அழகையும், ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் இழக்கத் தொடங்கியது. தங்கமீனின் தோழர்கள் அனைத்தும் அதைத் தேடி அதன் வீட்டைத் தட்டின. அப்போது தங்கமீன் சத்தம் எதுவும் போடாமல் ஒளிந்திருந்தது. அவையும் அது அங்கில்லை என எண்ணி, அதைக் கடலெங்கும் நீந்தித் தேடி அலைந்தன.



சில நாட்களின் பின் தங்கமீனுக்கு பசி தாங்க முடியவில்லை. அத்தோடு கூடி விளையாடுவதற்கு அதற்கு தன் தோழர்களைக் காணாதது மிகுந்த துயரத்தைக் கொடுத்தது. அதே வேளையில் அதற்கு வெளியே போவதற்கும் வெட்கம் மேலிட்டது.



தங்கமீனுக்கு தான் என்ன செய்யலாம் என்ற யோசனை மிகுந்தது. அவ்வேளையில் வீட்டுக்கு வெளியே அதன் தோழனான நண்டு நீலன் நடந்து போனது . தங்கமீன், இனியும் இப்படித் தனியாக இருக்க முடியாததால் வெளியே வந்து, நீலனை அழைத்தது.



நண்டிற்கும் தன் தோழியான தங்கமீனைப் பல நாட்களாகக் காணாதது மிகுந்த துயரத்தைக் கொடுத்திருந்தது.
அதற்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.
"தங்கமீனா என்னை அழைப்பது?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டது.




"நீலன், உன்னைப் பார்க்காமல் நான் பட்ட துயர் பெரிது, என்னை மன்னித்து விடு."
நீலனிற்கு எதுவும் புரியவில்லை.
"எதற்காக நான் உன்னை மன்னிக்க வேண்டும்? உன்னைக் காணாது நாங்கள் அனைவரும் கவலையில் இருக்கிறோம்."



தங்கமீன் தன் பேராசை பிடித்த மனதை எண்ணி
வெட்கமும் துக்கமும் அடைந்தது.
"என் தோழர்களை  வெறும் வெண்முத்தின் அழகில்
மயங்கியதால் இழந்து போனேனே," என்றது.



நீலனின் யோசனைப்படி, தங்கமீன் தன் வெண்முத்தோடு வீட்டிலிருந்து வெளியே வந்தது. தன் தோழர்கள்  இருக்குமிடம் தேடிப் போயிற்று. அங்கே தங்கமீனைக் கண்ட அதன் தோழர்கள் குதூகலம் அடைந்தன. அவற்றிற்கு தங்கமீன், தான் கண்டெடுத்த வெண்முத்தைக் கொடுத்தது.



இப்போது தங்கமீனுக்கு  பசி, துயரம், தனிமை, எல்லாம் சிறிது சிறிதாக மறைந்து போயின. மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் மீண்டும்  வந்தன. தங்கமீன் நண்பர்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

**முற்றும்**

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :** Poonkothai, UK

**Book: Thanga Meenum Venmutthum**
**(தங்க மீனும் வெண்முத்தும்)**

**Language: Tamil**

**Reading Level**: 3.3

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022



**About the writer :** Poonkothai migrated from Sri Lanka to the UK in 1989. After completing her graduation and post-graduation in science and education, she entered the educational field. She has been teaching as a qualified full-time English teacher at Government Schools in the UK for several years. Poonkothai published a Health Promotion book in 2004 and a collection of short stories in 2022, dedicating her Tamil skills to her late mother, a Tamil teacher, Puvaneswary.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics